# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஊத்தங்கரை

## கிருஷ்ணகிரி மாவட்டம்

அசல் வழக்கு எண்.15/2020 நாள்: 15.03.2021

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர் நீதிமன்றத்தில் திரு.மாதையன் பென்ஞ் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

பெயர் : ஜெயபால்

தந்தை/கணவர் பெயர் : உத்தண்டி கவுண்டர்

கிராமம் : தாலுக்கா :

வயது : வேலை :

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது தரப்பில் சாட்சியாக முன்னிலைனயாகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும் என்னால் சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். இதில் கையொப்பங்கள் அனைத்தும் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும்.

1. ஆவண எண்.377/1994–ற்கான பாகப்பிரிவினை பத்திரம் இணைய பதிவிறக்க பதிவு நகல் வா.சா.ஆ.1 ஆகவும்

2. எனது பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.497–ற்கான இணைய பதிவிறக்க கணிணி சிட்டா வா.சா.ஆ,2 ஆகவும்

3. எனது பெயரில் கந்தாயம் செலுத்தப்பட்டதற்கான கந்தாய ரசீதுகள் 2 எண்ணிக்கை வா.சா.ஆ.3 ஆகவும்

4. என் பெயரில் வழங்கப்பட்ட அடங்கல் கணக்கு உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆகவும்

5. எனது தந்தை பெயரில் பதிவாகியுள்ள பட்டா எண்.24-ற்கான இணைய பதிவிறக்க கணிணி சிட்டா வா.சா.ஆ.5 ஆகவும்

6. எனது தந்தை பெயரில் வழங்கப்பட்ட அடங்கல் கணக்கு உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.

(ஒம்/- சி.ராஜசேகர்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

ஊத்தங்கரை